DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF SESSIONS JUDGE, NAGAPATTINAM.**
**Sessions Case No. 51/2015**

**Deposition of Witness for Prosecution : P.W. 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராதாகிருஷ்ணன் | தகப்பனார்/கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 15.03.2023

**முதல் விசாரணை**

நான் தற்போது வேதாரண்யம் தாலுக்கா, கரியாப்பட்டினம் காவல் நிலையத்தில் பொறுப்பு காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கரியாப்பட்டினம் காவல் நிலைய குற்ற எண் 181/2003 ச/பி 147,148,341,342,324,307 இ.த.ச -படி வழக்கு கோப்பினை இதற்கு முன்பு இருந்த காவல் ஆய்வாளர் திரு. நடராஜன் மற்றும் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்த ஆய்வாளர் திரு. செல்வராஜ் என்பவர்கள் இறந்துவிட்டபடியால் மேற்படி இவ்வழக்கு கோப்பினை பார்வையிட்டு அதன்படி நான் சாட்சியம் அளிக்கிறேன். இதுசமபந்தமாக ஜெயபால் அவர்கள் கொடுத்த புகார் ஏற்கனவே அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2-ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 15.08.2003-ம் தேதி

அதிகாலை சுமார் 02.00 மணியளவில் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூ மருத்துவமனையில் கிடைக்கபெற்ற தகவலின் அடிப்படையில் அன்று பணியிலிருந்த உதவி ஆய்வாளர் ராஜகோபால் என்பவர் அங்கு உள்நோயாளியாக இருந்த ஜெயபால் த/பெ சுப்ரமணியன் என்பவரிடமிருந்து வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற 181/2003 வழக்கு பதிவு செய்து மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். மேற்படி காவல் ஆய்வாளர் அன்றைய தினம் சுமார் 11.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சி அமிர்தலிங்கம், கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7. அன்றைய தினம் 12.30 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து கொஞ்சம் ரத்தம் தோய்ந்த மண் மற்றும் இரத்தம் தோயாத மண் இவற்றை மகஜரில் கைப்பற்றியுள்ளார். அந்த மகஜர் அ.சா.ஆ.8 ஆகும். சம்பவ இட சாட்சியான ஜெயபால், ரமேஷ்குமார், ஜெயராமன், சண்முகமோகன், வடிவேல், கண்ணையன், மனோகரன், ராமச்சந்திரன், செல்வராணி, அமிர்தலிங்கம், கோவிந்தசாமி ஆகியோர்களை சம்பவ இடத்திலும, தஞ்சை மருத்துவ கல்லூரி சென்றும் விசாரித்துள்ளார். இவ்வழக்கின் எதிரியான மதியழகன் த/பெ மாணிக்கம் என்பவரை 18.05.2003 ம் தேதி செண்பகராயநல்லூர் ரயில்வே கேட் அருகே நின்றவரை காரணம் கூறி கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். 16.08.2003-ம் தேதி 1ம் எதிரி ராஜசிம்மன், 2ம் எதிரி மாதவன், 3ம் எதிரி தேவேந்திரன் ஆகியோர்களை கரியாப்பட்டினம் செங்காதலை பாலம் அருகே நின்றிருந்தவர்களை காலை 08.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்தும், அங்கிருந்த சாட்சி ஞானவேல்,

ரங்கசாமி ஆகியோர் முன்னிலையில் எதிரி ராஜசிம்மன் என்பவரிடம் இருந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுள்ளார், அதில் என்னை அழைத்து சென்றால் நான் வைத்திருக்கும் அருவாளை எடுத்து ஆஜர் செய்கிறேன் என்றார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9. அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 09.00 மணிக்கு மாதவன் த/பெ தர்மையன் என்பவரை விசாரித்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார், அதில் என்னை அழைத்து சென்றால் நான் வைத்திருக்கும் அருவாளை எடுத்து ஆஜர் செய்கிறேன் என்றார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10. 10.00 மணிக்கு எதிரி தேவேந்திரன் என்பவரிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார், அ தன் அடிப்படையில் எதிரி தன்னை அழைத்து சென்றால் நான் மறைத்து வைத்திருக்கும் கத்தியை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.11. அன்றைய தினம் 11.30 மணிக்கு எதிரி ராஜசிம்மன் என்பவர் அவர் வீட்டின் கீழ்பக்கம் அருகில் சவுக்குதோப்பில் மறைத்து வைத்திருந்த அரிவாளை ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றியுள்ளார். அந்த மகஜர் அ.சா.ஆ.12. அன்றைய தினம் 12.15 மணிக்கு மாதவன் என்பவர் மறைத்து வைத்திருந்த அரிவாளை ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றியுள்ளார். அந்த மகஜர் அ.சா.ஆ-13. அந்த இரும்பு அருவாளில் ரத்த கறை படிந்திருந்த அதன் மொத்த நீளம் 45 செ.மீ. இரும்பு பூணுடன் சுமார் 13 செ.மீ. 16.08.2003-ம் தேதி 11.00 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் தேவேந்திரன் என்பவர் பாலா கத்தி ஒன்று, ரத்தகறை படிந்துள்ளது, அதில் பிளாஸ்டிக் பிடியுடன் 13 1/2

செ.மீ எடுத்து ஆஜர் செய்தததை மகஜரில் கைப்பற்றியுள்ளார். அந்த மகஜர் அ.சா.ஆ.14. படிவம் 95 மூலம் கைப்பற்றிய தடயங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். மேற்படி எதிரிகளிடம் விசாரணையை முடித்து 16.08.2003-ம் தேதி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். அ.சா. சாட்சிகள் 3, 4, 7,8 ஆகியோர் தங்களை ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றும், அதுபோல் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று அவர்கள் கூறுவது தவறு, அதுபோல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்று அவர்கள் கூறுவது தவறு. அந்த ஆய்வாளர் பின்னிட்டு சாட்சிகள் 2, 3 ஐ விசாரித்து காயசான்று பெற்று குற்றபத்திரிக்கையை அடுத்த ஆய்வாளர் தாக்கல் செய்துள்ளார். மேற்படி தடய பொருள்கள் சாட்சிகள் ஞானவேல், ரங்கசாமியை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவரது விசாரணையை முடித்து அவர் பணி மாறுதலில் சென்றுள்ள காரணத்தால் நடராஜன், ஆய்வாளர் இவ்வழக்கு கோப்பினை பார்வையிட்டு இதற்கு முன் விசாரணைய செய்த வாய்மேடு பொறுப்பு காவல் ஆய்வாளர், கரியாப்பட்டினம் நடராஜன் வைத்திருந்த வழக்கு கோப்பினை பார்வையிட்டு வழக்கில் காயம்பட்டிருந்த தியாகராஜன், என்பவருக்கு டாக்டர் விக்டர் சேகர் என்பவர் நுண்கதில் மூலம் படம் எடுத்து அவருக்கு வலது கன்னத்தில், வலது கை மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று அளித்ததன் பேரில் டாக்டர் விஜயலட்சுமி, தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி காயச்சான்று வழங்கியுள்ளார். அதில் காயப்பட்ட ரமேஷ் என்பவருக்கு டாக்டர் விஜயலட்சுமி, காயத்தின் தன்னை சொற்ப காயம் என்று கூறியுள்ளார். டாக்டர் சார்சீர் என்பவர் ஓ.பீ யாக சிகிச்சை செய்தவர் அவருக்கு காயம் சொற்பகாயம் என்றும் சான்று அளித்துள்ளார்.

11.05.2005-ம்தேதி காயச்சான்று பெற்றும் அன்றைய தினமே பிரிவு 147,148,341,326,324,307 உ/இ149 -ன் கீழ் குற்றபத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)

ஆய்வாளர் நடராஜன் வழக்கு விசாரணையை பெற்றுகொண்டு எப்போது விசாரணையை தொடங்கினார் என்று குறிப்பு ஏதேனும் உள்ளதா என்றால் 15.08.2003-ம் தேதி காலை 11.00 மணியளவில் உதவி ஆய்வாளர் ராஜகோபால் போன் மூலம் தகவல் சொன்னதன் பேரில் 11.30 மணிக்கு மேல் நடவடிக்கை எடுத்துள்ளார். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை எத்தனை மணிக்கு, எந்த காவலர் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டது என்ற குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையான புகார் அ.சா.ஆ-1 அடிப்படையில்தான் அச்சிட்ட முதல் தகவல் அறிக்கையில் எழுதப்பட்டது என்றால் சரிதான். அச்சிட்ட முதல் தகவல் அறிக்கையில் எழுத்து மூலமான ஒரு புகார் கூறப்பட்டள்ளது என்றால் சரிதான். அது தொடர்பான விவரங்கள் ஏதும் வாக்குமூலத்தில் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. அச்சிட்ட முதல் தகவல் அறிக்கையில் 2ம் பக்கத்தில் தென்னம்புலத்தில் தன்னுடைய வீட்டின் அருகே தெரிந்த நபரால் கத்தியால் குத்தப்பட்டதாக கூறப்பட்டுள்ளது, 2வது நபர் ரமேஷ் த/பெ தமிழ்மணி, தெரிந்த நபரால் அடித்ததாக கூறப்பட்டுள்ளது, ஆனால் எந்த இடம் என்று கூறவில்லை என்றால் சரிதான். ஜெயபால், ஆயக்காரன் புலம் சாலையில் வந்துகொண்டிருக்கும்போது தாங்கள் தாக்கப்பட்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். இந்த சூழ்நிலையில் ரத்தம் தோய்ந்த மண் மற்றும் தோயாத மண்ணை எடுத்து

பகுப்பாய்வுக்கு உட்படுத்தி இறுதி அறிக்கை ஏதும் பெறபடவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜரிலும் ரத்தம் தோய்ந்த மண் மற்றும் தோயாத மண் இருந்ததாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். 16.06.2005-ம் தேதிதான் பார்வை மகஜர் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், வரைபடத்தில் கண்டுள்ளது போலும், அ.சா.1 மற்றும் 2 கூறியதும்போலும், அவர்கள் கூறிய இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்ற காரணத்தினால்தான் மேற்கண்ட குளறுபடிகள் வழக்கு ஆவணத்தில் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் 2ம் பக்கத்தில் தியாகராஜன் பேசமுடியாத நிலையில் இருந்தார் என கூறப்பட்டுள்ளது, ஆனால் அது தொடர்பாக மருத்துவரிடம் இருந்த எந்த வாக்குமூலமும் பதிவு செய்யபடவில்லை என்றால் சரிதான். உண்மையில் தியாகராஜன் எதிரிகளை தொடர்புபடுத்தி எந்த வாக்குமூலமும் தரவில்லை, தன்னை தெரிந்த ஒரு நபர் வீட்டின் அருகே கத்தியால் குத்தியாக கூறியுள்ளார், அந்த வாக்குமூலம் எதிரிகளை தொடர்புபடுத்வில்லை என்பதால் அது மறைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. அதுபோலவே இவ்வழக்கின் புகாரானது எழுத்து மூலமாக அ.சா.1 தரப்பினரால் தரப்பட்டது. அப்புகாரும் எதிரிகளை தொடர்புபடுத்தி தெரிவிக்காததால் மறைக்கபட்டுவிட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புகாரானது திரு.நடராஜன் அவர்கள் அறிவுரையின் பேரில் உதவி ஆய்வாளர் ராஜகோபாலன் ஒரு கருவியாக பயன்படுத்ப்பட்டு எதிரிகளை சம்பந்தபடுத்தி உருவாக்கப்ட்டுள்ளது என்றால் சரியல்ல. இதன் காரணமாக்த்தான் காலதாமதாக நீதிமன்றம் அனுப்பபட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த நிலையை மறைப்பதற்காகத்தான் முதல் தகவல் அறிக்கை யார் வசம்

ஒப்படைக்கப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரியல்ல. நான் முன் வைத்துள்ள எதிரிகள் தந்ததாக கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலம் அனைத்தும் ஆயுதங்கள் சம்பவத்திற்கு பயன்படுத்ததாக, அது எந்த இடத்தில் மறைத்து வைக்கபட்டிருந்தன என்ற விவரங்கள் இல்லை என்றால் சரியல்ல. அதன் காரணமாக அனுமதிக்கப்பட்ட பகுதி என்று கூறப்படும் பகுதி ஆட்சேபணைக்குரியது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.12, 13, 14 இவற்றின் முதல் பத்தியில் மறைத்து வைக்கபட்ட ஆயுதங்கள் எடுத்து கொடுக்கப்பட்டன என்ற குறிப்புகள் இல்லை என்றாலும், அதில ்எதிரிகள் கையொப்பங்களும் இல்லை என்றால் சரிதான். ஆயுதங்களில் காணப்படும் ரத்தம் மனித ரத்தமா அல்லது விலங்கு ரத்தமா என்று பகுப்பாய்வுக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். ஆயுதங்களில், விலங்கு ரத்தம் தோய்த்து எடுக்கப்பட்டு வழக்கிற்காக உருவாக்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. போலிசார் விசாரணை காலத்தில் அ.சா.ஆ. 1ஐ, வாய்மேடு காவல் ஆய்வாளர் எப்போது, எங்கு வைத்து விசாரித்தார் என்ற எந்த குறிப்பும் இல்லை என்றால் ் சரிதான். 14.08.2003-ம் தேதி அ.சா.1 சிகிச்சை முடித்து வெளியேறவிட்டார் என்றாலும் 15.08.2003-ம தேதி எழுத்து மூலமாக புகார் கொடுத்தார் என்று சொன்னாலும் சரியல்ல. மருத்துவமனையில் சேர்ந்தபோது, ரமேஷ்குமார், 3வது எதிரி தேவேந்திரன தன்னை தாக்கியதாக குறிப்பிட்டு விவரங்களை தெரிவிக்கவில்லை என்றாலும், அ.சா.1 ஜெயபால் தன்னை இடது கால் முட்டி, மற்றும் இடது முட்டி பெருவிரலை யார் வெட்டினார்கள் என்றும் தெரிவிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரம், தேதி, இடத்தில் , 1 முதல் 4 எதிரிகள் கைது செய்யபடவில்லை என்றாலும், அவர்கள் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் தரவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் எந்த

சான்று பொருளும் கைப்பற்றபடவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் தவறான குற்ற நிகழ்வுகளை முன்னிறுத்தி, சட்டப்பிரிவுகளை முன்னிறுத்தி தவறாக குற்றபத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை